பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 20 (6—10—72) வெள்ளி   வெளியூர்: புரட்டாசி 21 (7—10—72) சனி [இதழ்: 94

இராணுவத்துக்கு முஜிப் கட்டளை

டாக்கா, அக். 6—

கள்ளக்கடத்தலைத் தடுப்பதில் சிவில் அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டு எல்லைப் பகுதிகளுக்கு விரைந்து செல்லுமாறு இராணுவத்துக்கும் -- கடற்படைக்கும் வங்க தேசத் தலைமையமைச்சர் ஷேக் முஜிபர் ரகிமான் ஆணை பிறப்பித்துள்ளார்.

அண்ணா விட்டுச் சென்ற சித்தாந்தம்

நாடாளுமன்ற மரபுக்கு இன்றியமையாத் தேவையானது

மக்களின் உள்ளமறிந்து செயல்படும் தமிழக ஆட்சி -- முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 6—

"ஆளப்படுவோரின் ஒப்புதல் பெற்று ஆளப்படுவதே சனநாயகம் -- என்று வர்ணிக்கப்படுகிறது; பெரும்பான்மையினரால் நடத்தப்படுகின்ற ஆட்சியே அது என்பதில் சந்தேகமில்லை; ஆனால், அது பெரும்பான்மையினருக்கான ஆட்சி அல்ல; 'பெரும்பான்மையினர் ஆட்சி என்பது தலைகளை எண்ணி நடத்தும் ஆட்சி அல்ல' என்பதை நாம் உறுதியாக உணர்ந்திருக்கிறோம்!

! எண்ணப்பட வேண்டியது தலைகளை அல்ல என்பதுடன், எண்ணப்பட வேண்டியது அந்த மக்களின் உள்ளங்களில் பொதிந்துள்ள ஆசை அபிலாஷைகளும் எண்ணங்களும் சிந்தனைகளுமேயாகும் என்பதே நம் கருத்தாகும்.

'மரியாதைக்குரிய எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு விட்டுச் சென்றுள்ளதும் -- நாங்கள் தமிழகச் சட்டப் பேரவையில் கடைபிடித்து வருவதுமான அரசியல் சித்தாந்தம் இதுவேயாகும்; இந்தச் சித்தாந்தமே ஒரு நாடாளுமன்ற அரசு முறைக்கு மதிப்புள்ள சொத்தாகும்!"

என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று சென்னையில் நடைபெறும் அனைத்திந்திய சட்டப் பேரவை -- மேலவைத் தலைவர்கள், சட்டமன்றத் துறை அலுவலர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர்.

அனைத்திந்திய சட்டப் பேரவை-மேலவைத் தலைவர்கள் மாநாட்டின் பொன் விழாவையொட்டி நடைபெறும் இக்கருத்தரங்கில், 'நாடாளுமன்றம்—மாநில சட்டப் பேரவைகள் ஆகியவற்றுக்கிடையில் முறையே ஆன பணிகள்; சட்டமன்றம்--தன்னுதிக்கம்பெற்ற அமைப்புகள்' என்ற தலைப்பினைக் கருத்தரங்கின் விவாதத்திற்காகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள், நாடாளுமன்றம்—தமிழ்நாடு சட்டமன்றம் ஆகியவைகளில் சிறப்பாகப் பணியாற்றி உரிமைகளைப் பாதுகாத்த முன்னுள் அவைத் தலைவர்களைப் பாராட்டினர்.

"தமிழகத்தில் சிறுபான்மையினராக உள்ள இதர மொழிவழி மக்களின் உணர்ச்சிகளும்--எண்ணங்களும்--தேவைகளும் உணரப்பட்டு--மதிக்கப்பட்டுக் காக்கப்படுகின்றன" என்பதைக் கோடிட்டுக் காட்டினர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"சனநாயகத்தில் சிறுபான்மையினர் எப்படி இயங்க முடியும் என்று கேட்கப்படக்கூடும்; சனநாயகத்தில் சிறுபான்மையோராக உள்ளவர்கள், ஆட்சியில் தீவிர பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். சிறுபான்மையோர், எல்லாவற்றையும் மற்றித் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கச் சட்டமன்றங்களில் முழு உரிமையும் வாய்ப்பும் அளிக்கப்படுகின்றது.

சிறுபான்மையினரின் கருத்துக்களைப் பெரும்பான்மையோர் கவனமாகக் கேட்டு -- அந்தக் கருத்துக்களுக்கு உரிய இடமளிக்க எல்லா வகையாலும் பெரும்பான்மையினர் முயற்சிக்கின்றனர்.

எதிர்க் கட்சியினரது கோரிக்கைகள் ஆளுங்கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான உதாரணங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்த மட்டில் பற்பல உண்டு; எனவே, 'எடுத்துச் சொல்ல சிறுபான்மை -- தொடுத்து முடிக்கப் பெரும்பான்மை' என்று சொல்வது பொருந்தும்.

ஆக, நாடாளுமன்ற சனநாயகம் என்பது நற்பண்போடு -- அடக்கத்தோடும் -- மிகுந்த நம்பிக்கையோடும் -- பொறுமையோடும் -- மதி நுட்பத்தோடும் -- சகிப்புத் தன்மையோடும் செயல்படுத்திட வேண்டிய சிக்கலான அரசு முறையாகும்; சனநாயகச் செயல்பாடுகளில் இந்த நல்லியல்புகளே மிளிர வேண்டும்."

'தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர்'

'தீர்க்க தரிசனமிக்க இராசதந்திரி -- மக்களின் பேரன்புக்கு உரியவர்'

பேரறிஞர் அண்ணாவுக்கு நாடாளுமன்றத் தலைவர் பாராட்டு -- 'சனநாயக மரபு தமிழகத்தில் வேரூன்றுகிறது' எனக் கருத்து

சென்னை, அக். 6—

"தமிழ்நாட்டை ஆளும் தி. மு. கழக அரசுக்கும் – மத்திய அரசுக்கும் இடையே நல்ல உறவு நிலவுவது, சனநாயகத்தின் சக்திக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆட்சிப்பீடத்தில் பல்வேறு கட்சிகள் இருந்தாலும் – ஆளும் கட்சிகளுக்குள் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டின் நலனைக் கருதி எப்படி அவைகள் சுமூகமாக இயங்கமுடியும் என்பதை இந்த உறவு எடுத்துக்காட்டுகிறது.

நமது தேசிய வாழ்க்கையில் சனநாயக உணர்வும் – சனநாயக அமைப்புகளும் எந்த அளவுக்கு ஆழமாக வேரூன்றியிருக்கின்றன என்பதையும் இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

கலை – கட்டடக் கலை – நடனக் கலை – இசை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகளில் தமிழக மக்களின் அரும்பெரும் சாதனைகள் நம்மைப் பெருமையடையச் செய்கின்றன.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்குத் தமிழகம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவைகளாகும்.

நவீன தமிழகத்தின் தனிப் பெரும் தலைவரும் -- மக்களின் பேரன்புக்கு உரியவருமான திரு. அண்ணாதுரை அவர்கள், இந்த நேரத்தில் நம்மிடையே இல்லை; நாட்டிற்கு அவரது பணி மிகமிகத் தேவைப்படும் இந்த நேரத்தில், மரணத்தின் கொடிய கரங்கள், நம்மிடமிருந்து அவரைப் பறித்துக் கொண்டுவிட்டது.

ஆற்றல் வாய்ந்ததொரு அமைப்பாளரும் -- சீரிய நிர்வாகியுமான திரு. அண்ணாதுரை அவர்கள், தீர்க்கதரிசனப் போக்கும் -- அஞ்சாமையும் நிறைந்த ஒரு மாபெரும் இராசதந்திரியாவார்; அவரது திறமைமிக்க தலைமையின்கீழும், ஊக்கமளிக்கும் உணர்வு மூலமும் தமிழகத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது."

மதிநுட்பமிக்க தலைவர் கருணாநிதி

'தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டின் சீரிய நிர்வாகியாக விளங்குகிறார்; மதிநுட்பம் வாய்ந்த தலைவராக விளங்குகிறார்; அறிவுத் திறனுள்ள தலைவரைத் தமிழகம் பெற்றிருப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்."

'நமது வரவேற்பாளர்களான தமிழ்நாடு மேலவைத் தலைவர் திரு. சி. பி. சிற்றரசு அவர்களும், சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும் புதிய தமிழகத்தை உருவாக்குவதற்கு ஏற்பட்ட பங்கு நாம் அனைவரும் நன்கு அறிந்ததேயாகும்."

-- மக்களவைத் தலைவர் ஜி. எஸ். தில்லான்

(அனைத்திந்திய சட்டப் பேரவை -- மேலவைத் தலைவர்கள் மாநாட்டின் தலைமையுரையில்)

ஏழரை ஆண்டுகளில் 75 இலட்சம் குண்டுகள்

வியட்நாம் நகரங்களில் அமெரிக்கா வீசியதாம்

வாஷிங்டன் அக். 6—

கடந்த ஏழரை ஆண்டுகளில் அமெரிக்கப் போர் விமானங்கள் வியட்நாம் -- லாவோஸ் -- கம்போடியா ஆகிய பகுதிகளில் சுமார் 75 இலட்சம் குண்டுகளை வீசியிருக்கின்றன!

இரண்டாவது உலகப் போரின் போது நேசநாடுகள் பயன்படுத்திய குண்டுகளின் அளவைக் காட்டிலும் இது சுமார் மூன்றரை மடங்காகும்.

அமெரிக்கப் பாதுகாப்புத்துறையின் அதிகாரபூர்வமான புள்ளி விவரத்தின்மூலம் இது தெரியவருகிறது; அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"நடப்பு ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அமெரிக்கா, இந்தோ--சீனுவில் 8 இலட்சம் டன்களுக்கும் அதிகமாகக் குண்டுகளைப் போட்டிருக்கிறது; 1971-ல் போடப்பட்ட குண்டுகளின் அளவை இது மிஞ்சிவிட்டது; அந்த ஆண்டில் 7.63 இலட்சம் டன் குண்டுகள் போடப்பட்டன."

அமைச்சருக்குப் பதில் ஏழை முதியவர்

மருத்துவ மனையைத் திறந்து வைத்தார்

ஆலப்புழை, அக். 6—

புரக்காடு ஒன்றிய மருத்துவமனையைத் திறப்பதற்குக் கேரள மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் என். கே. பாலகிருஷ்ணன் வருவா

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டின் ஜரிகைத் தேவை

மூன்றில் ஒரு பங்கு காஞ்சியில் உற்பத்தியாகும்

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்க அரசு உதவி — அமைச்சர் செ. மாதவன் தகவல்

காஞ்சிபுரம், அக். 6—

காஞ்சிபுரத்தில் ஜரிகைத் தயாரிப்பு ஆலை ஒன்றிற்குத் தொழில் அமைச்சர் செ. மாதவன் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டுக் கைத்தறிப் பட்டு நெசவாளர்களுக்குத் தேவையான ஜரிகையில் மூன்றில் ஒரு பங்கு இந்த ஆலையில் தயாராகும்; அடுத்த சனவரித் திங்களில் இந்த ஆலையில் உற்பத்தித் துவங்கும்.

தற்போது தமிழ்நாட்டுக்குத் தேவையான ஜரிகைப் பொருள், சூரத்திலிருந்து வாங்கப்பட்டு வருகிறது; வெளிநாட்டு ஜரிகை நூலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரத்தில் அமைக்கப்படும் ஜரிகை ஆலையின் பங்கு மூலதனம் ரூ. 5 இலட்சத்திலிருந்து, ரூ. 20 இலட்சமாக உயர்த்தப்படும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனைப் பிரிவான 'கோ-ஆப்டெக்ஸ்' அமைத்துள்ள நவீன துணிக் கடையையும் காஞ்சிபுரத்தில் அமைச்சர் மாதவன் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்காக நடப்பு ஆண்டில் சலுகைத் தள்ளுபடி தொகை ஈட்டுதியமாகத் தமிழக அரசு ரூ. 60 இலட்சம் வழங்கியிருக்கிறது.

விற்பனை அதிகரிப்புப் பணிகளுக்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரசு ஊழியர்களுக்குக் கைத்தறித் துணிகளைக் கடனாக வழங்குவதற்காக 'கோ-ஆப்டெக்'சுக்கு ஒன்றரைக் கோடி ரூபாயை அரசு அளிக்கிறது."

விபசாரக் குற்றம் அதிகரிப்பு

'வறுமையே காரணம்' என்கிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, அக். 5—

"பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுவதற்கு வறுமையே காரணமாகும்; நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமாக இருப்பதால், விபசாரம் அதிகரிக்கிறது.

"வெகுக் காலந்தொட்டே இருந்துவரும் இந்த விபசாரத் தொழிலை, சட்டம் – ஒழுங்கின் மூலமாகத் தடுத்துவிட முடியாது; சமுதாயம் தனது பொறுப்பை உணர்ந்து ஒத்துழைப்பதன் மூலமாகவே இதை நீக்க முடியும்."

என்று மத்திய அரசின் சட்ட அமைச்சர் எச். ஆர். கோகலே, 'உலகத்தில் விபசாரப் பிரச்சினை' என்பது குறித்தும் புதுடில்லியில் நடைபெறும் ஒரு மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

மாநாட்டை, தலைமை நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ். எம். சிக்ரி துவக்கிவைத்தார்.

இந்தியாவில் இந்த மாநாடு நடப்பது இதுவே முதல் தடவையாகும்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 20 நாடுகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

"நாட்டிலுள்ள சமூக — பொருளாதார நிலைமைகளின் விளைவாகவே விபசாரம் அதிகரிக்கிறது" என்று தலைமை நீதிபதி சிக்ரி குறிப்பிட்டார்.

"சமுதாயத்தின் தவறினால்தான் விபசாரம் நீடிக்கிறது; விபசாரக் குற்றங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்போது, மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் மற்றொரு விலங்குகள் புகலிடம்

ஆனைமலையில் ஏற்படுத்தப்பட்டது

விலங்குகளைப் பேணிக்காக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆளுநர் கே.கே. ஷா

சென்னை, அக். 6—

ஆனைமலை வனவிலங்குப் புகலிடத்தில் மற்றுமொரு வனவிலங்குப் புகலிடம் ஏற்பட்டது; இதனைச் சேர்த்து தமிழ்நாட்டில் புகலிடங்கள் எண்ணிக்கை 6-ஆக உயர்ந்திருக்கின்றன.

அண்மைக் காலமாகக் கணிசமான அளவில் பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் வளர்ச்சி அடைந்த மற்ற புகலிடங்கள் வருமாறு:—

முதுமலை (நீலகிரி மாவட்டம்)

முண்டன்துறை (திருநெல்வேலி மாவட்டம்).

கிண்டி (சென்னை).

வேதாரண்யம் (தஞ்சை மாவட்டம்).

வேடந்தாங்கல் (செங்கற்பட்டு மாவட்டம்).

கடைசி இரண்டும் பறவைகளுக்கான புகலிடங்கள்.

புலிகள் — சிறுத்தைகள் — கரடிகள் — யானைகள் — பலவகை மான்கள் ஆகியவை புகலிடங்களில் உள்ளன.

புதிதாக ஏற்பட்டுள்ள ஆனைமலைப் புகலிடத்தின் பரப்பு சுமார் 800 சதுர கிலோ மீட்டர்.

சென்னையில் வனவிலங்கு வாரத்தைத் துவக்கிவைத்து ஆளுநர் கே. கே. ஷா பேசுகையில், 'வனங்களையும் — வனவிலங்குகளைப் பேணிக் காப்பதற்காகப் பெரிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது' என்று தெரிவித்தார்.

"வனவிலங்குகட்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கான விரிவான மசோதா ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது" என்றும் அவர் கூறினார்.

"நாட்டின் செல்வமான வனவிலங்குகளைப் பேணிக் காப்பதில் ஒவ்வொரு குடிமகனும் அக்கறை காட்ட வேண்டும்" எனவும் வலியுறுத்தினார்.

கிண்டி சிறுவர் பூங்காவில் நடந்த விழாவில், வனத் துறை அமைச்சர் ஓ. பி. இராமனும் பேசினார்; வனவிலங்குகளைப் பேணிக் காப்பதில் பொதுமக்களின் ஒத்துழைப்பை அவர் கோரினார்.

முதலமைச்சர் கலைஞர், செய்தி ஒன்றை விடுத்திருந்தார்; வனங்களையும் — வனவிலங்குகளையும் பேணிக் காப்பதன் அவசியத்தை முதலமைச்சர் வலியுறுத்தியிருந்தார்.

மாவட்ட வேளாண்மை துறை அமைப்புகள்

விவசாயிகளுக்கு இன்னும் சிறந்த முறையில் உதவக்கூடிய அளவில் மாவட்டங்களில் வேளாண்மைத் துறை அமைப்பைத் திருத்தியமைக்கத் தமிழக அரசு எண்ணியிருக்கிறது.

முதலில் பரிட்சார்த்தமாகத் திருச்சி மாவட்டத்தில் இவ்வாறு மாற்றியமைக்கப்படும்; அது வெற்றி பெற்றால், மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இதன் தொடர்பாக, வேளாண்மைத் துறைச் செயலாளர் வேதநாராயணன் — இயக்குநர் அந்தோணி ஆகியோருடன் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், கலந்தாலோசித்தார்.

இந்தத் திட்டத்தின்படி, விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களை அளித்து உதவுவதற்காகத் தாலுகா அல்லது வட்டத்திற்கு ஒரு அதிகாரியை நியமிக்க அரசு எண்ணியிருக்கிறது.

இந்தத் திட்டத்துக்கு முதலமைச்சர் ஒப்புதல் அளித்துவிட்டார்.

செவ்வாய் கிரகத்திற்கு மனிதன் செல்வான்

மாஸ்கோ, அக். 4—

1957-ம் ஆண்டு அக்டோபர் 4-ந்தேதியன்று முதன் முதலாக இரஷ்யா, விண்வெளியில், 'ஸ்புட்னிக்' கோள் பறக்கவிட்டது.

விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டு 15 ஆண்டுகள் முடிவடைந்ததையொட்டி இரஷ்யாவில் விழா நடக்கிறது.

இதையொட்டி இரஷ்ய விண்வெளி விஞ்ஞானி வால்டிமர் சத்தாலோவ் நிருபர்களிடம் கூறியதாவது:—

"செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதனை அனுப்பத் திட்டமிட்டிருக்கிறோம்; இந்தத் திட்டத்தை இரஷ்யாவும் — அமெரிக்காவும் கூட்டாகச் சேர்ந்து செயல்படுத்தும். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் செவ்வாய் கிரகத்துக்கு மனிதன் அனுப்பப்படுவான்.

"இரஷ்ய—அமெரிக்க ராக்கெட்டுகளை விண்வெளியில் ஒன்று இணைத்து விரைவில் ஆராய்ச்சி நடைபெறும்."

திருவரங்கத்தில்

அண்ணா பிறந்தநாள் விழா

15—9—72 அன்று திருவரங்கம் — திருவானைக்கோவில் வட்ட வாரியாகக் கொடி ஏற்றப்பட்டது; பொங்கல் — சுண்டல் வழங்கப்பட்டது.

நகர தி. மு. க. செயலாளர் எஸ். எம். வி. சாமி எம்.சி., மா. இராமையா, கோ. இராமு, நகர மன்ற உறுப்பினர்கள் க. இராசவேலு, பொன்னுசாமி, சுந்தரம், எஸ். பி. பெரியசாமி, ஆர். ரங்கசாமி, மற்றும் எஸ். சுப்பையன், சி. இராதா, தியாகராசன், எம். எஸ். மணி, சி. களியபெருமாள், த. நாகராசன், ஆர். கந்தசாமி ஆகியோர் கொடி ஏற்றினர்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் — நாடு கொண்டாடிய நல்விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் கடந்த ஆகஸ்டு 15-ஆம் நாள் தொடங்கி நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், துணை—சார்பு மன்றங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் பல்வேறு பொது அமைப்புகள் சார்பில் ஆங்காங்கு வாய்ப்பு-வசதிகளுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணா திருவுருவம் படம் அலங்கரிக்கப்பட்டும்—ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும், கொடி ஏற்றி ஏழைகட்கு உணவு அளித்தும், சிறார்கட்கு இனிப்பு வழங்கியும், பள்ளி மாணவ-மாணவியருக்குச் சீருடை—எழுதுபொருள்கள் வழங்கியும், சொற்பொழிவுகள்—கவியரங்குகள்—இசையரங்குகள் நடத்தியும் விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆங்காங்கு கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன:—

சென்னை 98-வது வட்டத்தில்

டாக்டர் தர்மாம்பாள் நினைவு மன்றம்

15—9—72 காலை அ. பக்தவத்சலம் தலைமையில் சு. அரிகிருஷ்ணன் எம்.சி. கொடியேற்றிவைத்தார்; அ. சி. துளசிங்கம் எம்.சி. அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; வட்டச் செயலாளர் மு. கண்ணப்பன் உணவு வழங்கினார்; வி. மாணிக்கம் இனிப்பு வழங்கினார்; கே. சூரியகாந்தன் நன்றி கூறினார்.

மாதவன் மன்றம்

ஆர். கே. நகர் மாதவன் மன்றச் சார்பில் 16—9—72 காலை கே. குப்புசாமி தலைமையில் — என். கே. டில்லிபாபு முன்னிலையில் சு. அரிகிருஷ்ணன் எம்.சி. கொடியேற்றிவைத்தார்; மாவட்டப் பொருளாளர் டி. கே. கபாலி அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; மு. கண்ணப்பன் உணவு வழங்கினார்; தோழர்கள் பலர் சிறப்புரையாற்றினர்.

இராசா அண்ணாமலைபுரம்

நாராயணசாமி தோட்டம் காமராசர் சாலையில் 17—9—72 காலை சு. அரிகிருஷ்ணன் தலைமையில் விழா நடைபெற்றது; என். பி இராமசெயம் வரவேற்றார்; தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் கொடியேற்றிவைத்தார்; அ. இ. துளசிங்கம் எம்.சி. அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; டி. கே. கபாலி உணவு வழங்கினார்; தோழர்கள் பலர் சிறப்புரையாற்றினர்; வட்டக் கழகத் தோழர்கள் 64 பேர்களால் 64 கொடிகள் ஏற்றப்பட்டன.

இளைஞர் படிப்பகம்

இளைஞர் படிப்பகச் சார்பில் 19—9—72 காலை நா. பூ. கிராமசெயம் தலைமையில் விழா நடைபெற்றது; அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் கொடியேற்றிவைத்தார்; டி. கே. கபாலி அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; சு. அரிகிருஷ்ணன் எம்.சி. உணவு வழங்கினார்; துணை மேயர் என். வி. என். சோமு, அ. சி. துளசிங்கம் எம்.சி., மு. கண்ணப்பன், பக்தவத்சலம், வி. மாணிக்கம், எம். எஸ். வீரகேசரி ஆகியோர் பேசினர்.

சத்தியவாணிமுத்து மன்றம்

டாக்டர் சத்தியவாணிமுத்து குடிசைவாழ்வோர் மன்றச் சார்பில் 22—9—72 காலை கா. கண்ணன் தலைமையில் விழா நடைபெற்றது; சு. அரிகிருஷ்ணன் எம்.சி. கொடியேற்றினார்; டி. கே. கபாலி அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; மு. கண்ணப்பன் இனிப்பு வழங்கினார்; தோழர்கள் பலர் உரையாற்றினர்.

கலைஞர் கருணாநிதி மன்றம்

மதியழகன் நகர்—கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றச் சார்பில் 23—9—72 காலை எஸ். சி. இராமதாஸ் தலைமையில் அரிகிருஷ்ணன் எம்.சி. கொடியேற்றிவைத்தார்; மு. கண்ணப்பன் அண்ணா படத்தைத் திறந்துவைத்தார்; வி. மாணிக்கம் உணவு வழங்கினார்; தோழர்கள் பலர் பேசினர்.

உத்தமதானி

தி. மு. க. சார்பில் 15—9—72 ல் அண்ணா அவர்களின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்டு—வான வேடிக்கைகளுடன் ஊர்வலம் நடைபெற்றது.

பள்ளிப் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டது; குழந்தைகளுக்கும் — பொது மக்களுக்கும் இனிப்புகளும், சுவையுடன்கூடிய உணவும் வழங்கப்பட்டது.

செந்நீர் குப்பம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் 15—9—72 அன்று விழாவினையொட்டி திரு. தேவதாஸ் கொடி ஏற்றிவைத்தார்; சர்க்கரை பொங்கலும், இனிப்பும் வழங்கப்பட்டது.

குண்ணத்தூர்

ஆரணி வட்டம் குண்ணத்தூர் தி.மு.க. சார்பில் 15—9—72 ல், திரு. கெ. சம்பந்தன் தலைமையில் விழா சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது; காலையில் கொடியேற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

தஞ்சை

31-வது வட்ட இளைஞர் மன்றம் சார்பில் 23—9—72-ல் விழா கொண்டாடப்பட்டது; சி. சாமி அன்பன் வரவேற்புரையாற்றினார், சு. சந்திரன் தலைமை தாங்கினார்; தோழர்கள் வ இராசமனோகரன், பி. விருத்தாசலம், சிவ. பாலு ஆகியோர் பேசினர்; இரா. கலிவரதன் நன்றி கூறினார்.

மதுரை 29-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு விழாப் பொதுக் கூட்டம் மேங்காட்டுப் பொட்டல் திடலில் திரு. எல். எஸ். சுந்தரம் தலைமையில் நடைபெற்றது; திருவாளர்கள் அம்பிகேசுவரன், மாணவர் தலைவர் இராமு, கே. எஸ். சந்தானம் எம்.சி., துணைமேயர் எம். ஆர். சங்கரன், கு. திருப்பதி எம்.எல்.ஏ., சொ. காவேரிமணியன் எம்.எல்.ஏ., சிதம்பரம், சி. பி. கனகசபை எம்.சி., ஆகியோர் பேசினர்.

பெரியகுளம்

நகர தி.மு.க. சார்பில் திரு. எம். கே. ஆறுமுகம் தலைமையில் விழா நடந்தது.

நகர்மன்ற உறுப்பினர் எம். பி. காமாட்சி பாண்டியன், பி. பாண்டியன், நகர்மன்றத் தலைவர் கே. எம். எம். மேத்தா, கோவை இரா. மோகன் ஆகியோர் பேசியபின் நகரச் செயலாளர் நன்றி கூறினார்.

சிதம்பரம்

24—9—72 அன்று நகர தி.மு.க. செயலாளர் சு. கோவிந்தராசன் இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் விழா சிறப்புற நடைபெற்றது.

நகர தி.மு.க. துணைச் செயலாளர் இராம முத்துக்குமரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

திருவாளர்கள் இரத்தின பாலகுருசாமி, நகரமன்ற உறுப்பினர் சிவக்கொழுந்து ஆகியோர் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தனர்.

நகரமன்றத் தலைவர் கோ. துரைராசன் பூந்திபொட்டலம் வழங்கினார்.

நகர தி.மு.க. பொருளாளர் துரை. பாலசுப்பிரமணியம், தி. க. செயலர் டி. கே. மூர்த்தி, கே. ஆர். கணபதி எம்.சி., புலவர் முத்து தமிழரசன், இரா. சக்கரவர்த்தி, வி. சி. சாமிநாதன் எம்.பி. ஆகியோர் பேசினர்.

திருக்காட்டுப்பள்ளி

16—9—72 அன்று திருக்காட்டுப்பள்ளி கிளை நூலகத்தில், திரு. பா. இராமசாமி அவர்களால் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; நூலக நுழைவாயிலில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

அண்ணா அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன; கண்காட்சியை திரு. பொன் செல்லத்துரை திறந்து வைத்தார்.

குழவடையான்

உடையார்பாளையம் வட்டத்தைச் சேர்ந்த குழவடையான் கிராமத்தில் அறிஞர் அண்ணா படம் அலங்கரிக்கப்பட்டது.

அவைத் தலைவர் பிச்சைமுத்து கொடியேற்றி வைத்தார்.

தோழர்கள் மு. மகாலிங்கம், சந்திரராசன் ஆகியோர் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினர்.

துறையூர்

துறையூர் நகர தி. மு. க. சார்பில் விழா சிறப்புடன் கொண்டாடி இனிப்பு வழங்கப்பட்டது.

கீழத் தெப்பக்குளத் தெரு — குட்டக்கரை தெரு — வடக்குத் தெரு — காமாட்சியம்மன் கோவில் தெரு ஆகிய இடங்களில் செயலாளர் அ. சித்தி கொடியேற்றி வைத்தார்; ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

தோழர்கள் கல்பட்டரை கிருஷ்ணன், ந. தங்கவேல், டிரைவர் இராமசாமி, கோவிந்தன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தஞ்சை 31-வது வட்டம்

தி. மு. க. சார்பில் 15—9—72-ல் பூக்காரத் தெருவில் கே. வி. கே. சாமி அன்பு நிலையத்திலும் — பூக்கார மண்ணையார் தெருவிலும் சி. சாமி அன்பன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்; இனிப்பு வழங்கப்பட்டது.

பள்ளிச் சிறுவர்கள் இருவாலருக்கும் ஓட்டப் பந்தயம் வைக்கப்பட்டது; சாமி அன்பன் பரிசு வழங்கினார்.

16—9—72 காலை 10 மணிக்கு பூச்சந்தைக்கு எதிரில் சாமி அன்பன் கொடி ஏற்றிவைத்து ஏழைகளுக்கு உணவு வழங்கினர்.

அன்று இரவு 7-மணிக்கு 31-வது வட்டம் பாத்திமா நகரில் சி. சாமி அன்பன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் த. பொ. கண்ணன் எம்.சி. கொடி ஏற்றிவைத்தார்; தஞ்சை நகர் மன்றத் தலைவர் செ. பெத்தண்ணன் கே. வி. கே. சாமி படிப்பகத்தைத் திறந்து வைத்து கே. வி. கே. சாமி தொண்டு பற்றியும் — அண்ணாவின் சிறப்பு இயல்புகள் பற்றியும் விளக்கிப் பேசினர்.

நகர்மன்றத் துணைத் தலைவர் கு. சுல்தான் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர்; இரா. கலிவரதன் நன்றி கூறினர்.

17—9—72 மாலை 5-மணிக்கு பூக்காரத் தெரு விளார்சாலையில் த. கருப்பையன் எம்.சி. தலைமையிலும்—சி. சாமி அன்பன் முன்னிலையிலும் சு. நடராசன் எம். எல்.ஏ. கொடி ஏற்றி வைத்துப் பேசினர்; இனிப்புகள் வழங்கப்பட்டன.

கே. வி. கே. சாமி மிதிவண்டி நிலையத்திலும் சு. நடராசன் எம். எல்.ஏ. கொடி ஏற்றிவைத்தார்; இனிப்பு வழங்கப்பட்டது.

சேலம்

15—9—72 அன்று நகராட்சிப் பாவடி துவக்கப்பள்ளியில் விழா கொண்டாடப்பட்டது; நகர மன்ற உறுப்பினர் பி. எஸ் மாணிக்கம் வரவேற்றுப் பேசினர்.

விழாவிற்கு நகராட்சி ஆணையாளர் அகமது அலி தலைமை வகித்தார்.

அண்ணா ஓவியக் கண்காட்சியை நகரமன்ற உறுப்பினர் ஏ. மாரியப்பன் திறந்து வைத்து உரையாற்றினார்.

நகராட்சித் துணைத் தலைவர் ஏ. அமானுல்லாகான் முதல் வகுப்பு — இரண்டாம் வகுப்பு மாணவ மாணவிகள் 514 பேருக்கு சிலேட்டுகளும், மேல் வகுப்பு மாணவ — மாணவிகளுக்குச் சீருடையும் வழங்கி உரையாற்றினர்.

திரு. கே. துரைசாமி எம்.சி., கே. எஸ். மணி, எம்.சி. ஆகியோர் அண்ணாவின் சிறப்பியல்புகள் பற்றி உரையாற்றினர்.

மாணவ—மாணவிகள், அண்ணா கலை நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர்.

நிலக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் 15—9—72-ல் விழா சிறப்பாக நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு திரு. பழ வீரப்பன் தலைமை தாங்கினார். செல்வி சி. தமிழரசி, சட்டமன்ற உறுப்பினர் ஆ. முனியாண்டி, ச. குருசாமி, து. இராசாராம் மற்றும் பலர் பேசினர்; 3,000 பள்ளி மாணவ—மாணவிகளுக்கு இனிப்பும், 1,000 ஏழைகளுக்குப் பொங்கலும் வழங்கப்பட்டது.

கரூர் மேலப்பாளையம்

தி மு. க. சார்பில் 17—9—72 இரவு 7 மணிக்கு திரு. வி. சங்கர் தலைமையிலும்—திரு. மா. பெரியசாமி முன்னிலையிலும் விழா நடைபெற்றது.

தோழர்கள் நல்லசாமி எம். எல்.ஏ., எம். மாரிமுத்து எம்.சி., தியாகராசன், க. பரமத்தி சேர்மன், கே. இராசு ஆகியோர் மேளவாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

திரு. கே. இராசு தலைமையில், தோழர் க. பரமத்தி சண்முகம் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்.

பின்னர், தோழர்கள் எம். மாரிமுத்து எம்.சி., எஸ். நல்லசாமி எம்.எல்.ஏ., தியாகராசன், பி. எம். ஓமாந்து, எம். மருதன், ஆகியோர் அண்ணாவின் சிறப்பியல்புகள் பற்றிப் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் பொன்முத்து சுப்பிரமணியன் நன்றி நவின்றார். குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இராணி அண்ணா கலைக் கழகம்

சென்னை, அக். 5—

'இராணி அண்ணா கலைக் கழகம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு நிறுவப்பட்டு — அதன் திறப்பு விழா அக். 2-ம் நாளன்று கோடம்பாக்கம் காஞ்சி மணிமொழியார் தமிழ்க் கல்லூரியில் நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மகன் சி. என். ஏ. பாபு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அமைச்சர் ஓ. பி. இராமன் பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

திருமதி கல்யாணி இராமசாமி, இராணி அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

இராணி அண்ணா கலைக் கழகம் பெயர்ப் பலகையை திருமதி சரோஜினி குஞ்சிதபாதம் திறந்து வைத்தார்.

மன்றத்தை வாழ்த்தி முன்னாள் மேயர் சா. கணேசன் எம்.சி., மா. செங்குட்டுவன் ('நம் நாடு'), முரசொலி சங்கரையா, சோ. கி. மூர்த்தி எம்.சி., 'மாலை மணி' சம்பந்தம், குறளேருழவர், அமுதராசவன், புலவர் அண்ணாமலை, ஆரூர் பாலு, இராசன், சுப்பையா, பார்த்தசாரதி, மாணிக்கம் ஆகியோர் உரையாற்றினர்.

பெங்களூரில்

பெங்களூர் 9-வது வட்ட தி. மு. க. சார்பில் 15—9—72-ல் சிறப்பான முறையில் விழாக் கொண்டாடப்பட்டது.

கழகக் கட்டடம் அலங்கரிக்கப்பட்டு அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

காலை 7 45 மணிக்கு அண்ணாவின் 64 வயதைக் குறிக்கும் வகையில் 64 வெடிகள் வெடிக்கப்பட்டன; வட்ட மாநகராட்சி உறுப்பினர் டாக்டர் சி. பாலசுந்தரம் எம்.சி. முன்னிலையில் வட்டக் கழகச் செயலாளர் வி. கே. நாகலிங்கம் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்; சுமார் 1,000 குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

சிவகாசியில்:

செப். 15-ம் நாளன்று காவல் நிலையம் முன்னுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர தி. மு. க. செயலாளர் எல். அண்ணாமலை, பொருளாளர் வ. சு. குருசாமி, எஸ். பி. மணியம், நகர் மன்ற தி. மு. கழக உறுப்பினர்கள் அண்ணா மன்றம்—எம் ஜி. ஆர். மன்றம்— நாவலர் மன்றம் ஆகிய கழகச் சார்பு மன்ற தோழர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அம்மன் கோவில்பட்டி அண்ணா மன்றச் சார்பில் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இரவு 7-மணிக்கு அம்மன் கோவில்பட்டி பெரியவர் இராசமணி மற்றும் கழகத் தோழர்களும் ஊர்வலமாகப் புறப்பட்டு அண்ணா சிலையை அடைந்தனர்; அண்ணா மன்றத் தலைவர் திருப்பதி அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்; சிறுவர்களுக்கு லட்டு வழங்கப்பட்டது.

இரவு 8-மணிக்கு சித்துராசபுரம் கிராமத்தில் கழகக் கொடியேற்றப்பட்டது; கா. காளிமுத்து எம். எல்.ஏ., மற்றும் கழகத் தோழர்கள் பேசினர்.

செப். 17-ஆம் நாள் அம்மன் கோவில்பட்டி முனீசுவரன் — தங்கமணியம்மாள் காலனிகளிலும், அம்புலமடம் ஆகிய இடங்களிலும் கழகக் கொடியேற்றி கா. காளிமுத்து எம்.எல்.ஏ. பேசினார்.

மாலை 6 மணியளவில் காத்தநாடார் தெருவில் நகர செயலாளர் எஸ். அண்ணாமலை தலைமையில் எஸ் பி. மணியம், கா. காளிமுத்து எம்.எல்.ஏ., ஆகியோர் கழகக் கொடியேற்றிப் பேசினர்.

இரவு 7-மணிக்கு அண்ணா தோட்டம் தெற்கு தெருவில் தோழர் ஏ. துரைக்கண்ணன் தலைமையில் எஸ். அண்ணாமலை, வ. சு. குருசாமி, வெ. வேலாயுதம், ஆறுமுகம் எம்.சி., பொன்னுச்சாமி, எஸ். பி. மணியம், வே. கருணாகரன், கே. வி. கே. இராசன், கா. காளிமுத்து எம்.எல்.ஏ. ஆகியோர் கழக கொடியேற்றிப் பேசினர்; சிறுவர்களுக்கு சிலேட்டு— எழுதுகோல் — வாய்ப்பாடு புத்தகமும் வழங்கினர்.

24—9—72 மாலை 4 மணியளவில் நகரச் செயலாளர் எஸ். அண்ணாமலை — கலைஞர் மன்றச் செயலாளர் இரா. குருசாமி சாத்தூர் வட்டப் பொருளாளர் சே. அ. ரசாக் எம்.சி., வே. கருணாகரன், ஏ. துரைக்கண்ணன், செயராமன், துரைக்கண்ணன் ஆகியோர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும், கலைஞர் மன்றச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வீதிகளில் கழகக் கொடியேற்றியும் — சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கினர்.

மாலை 6-மணியளவில் சத்தியவாணிமுத்து அம்மையார் மன்றத்தில் மதுரை எம். ஆர். கணேசன் கழகக் கொடியேற்றப்பட்டது; நகரச் செயலாளர் அண்ணாமலை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; எம். ஆர். கணேசன், வே. கருணாகரன், துரைக்கண்ணன், ரசாக் எம்.சி. ஆகியோர் பேசினர்.

இரவு 7-மணியளவில் முனீசுவரர் காலனியில் மக்கள் திலகம் எம் ஜி. ஆர். ஞாயிறு மன்றத்தில் மதுரை எம். ஆர். கணேசன் கழகக் கொடியேற்றினர்.

சிவகாசியில் பூங்காத் திடலில் எம். ஜி ஆர். மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகர தி. மு. கழக நிர்வாகிகளும், நகர் மன்ற தி. மு. கழக உறுப்பினர்களும், மதுரை எம். ஆர். கணேசனும் பேசினர்.

காமராசபுரம் காலனியில் எம். ஜி ஆர். மன்ற சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விருதை செயராசு, மற்றும் கழகத் தோழர்களும் பேசினர்.

பவானி

பவானி நகர தி. மு. க. சார்பில் நகரில் உள்ள துணை மன்றங்கள் அனைத்திலும் 15—9—72 காலை வட்டச் செயலாளர் இரா. தலைமையிலும்—நகரச் செயலாளர் மு. நாகராசன் முன்னிலையிலும் கொடியேற்றிவைக்கப்பட்டது.

மாலை 7-மணிக்கு, குட்டிபாளையம் அண்ணா திடலில் கே. எஸ். அப்பாச்சி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; எஸ். குருநாதன் வரவேற்புரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் ஏ. எம். இராசா, வட்டச் செயலாளர் இரா. துரை, கே. குழந்தைவேலன், கே. கே. சோமசுந்தரம், பவானி கணேசன், மு. நாகராசன், கே. நாகப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

செயங்கொண்டம் வட்டத்தில்:

கண்டியன்கொல்லை

தி.மு.க. சார்பில் 15—9—72 காலை 10 மணிக்கு வட்டச் செயலாளர் க.சொ. கணேசன் தலைமையில் கழகத் தோழர்கள் ஊர்வலமாக வந்து இனிப்பு வழங்கினர்; வட்டச் செயலாளர் கொடியேற்றி வைத்தார்.

கோமாலி

தி.மு.க. சார்பில் மாலை 4 மணிக்குக் கழகத் தோழர்கள் வட்டச் செயலாளர் க.சொ. கணேசன் முன்னிலையில் — செயலாளர் பட்டுசாமி தலைமையில் ஊர்வலமாக வந்து பல இடங்களில் கழகக் கொடியை ஏற்றிவைத்தனர்; ஊர்வலம் முடிந்தவுடன் க.சொ. கணேசன் சொற்பொழிவாற்றினார்.

குழவடையான்

இரவு 8 மணிக்கு க.சொ. கணேசன் முன்னிலையில் அ. பிச்சமுத்து கொடியேற்றினர்; தோழர்கள் சந்திரகாசன், மு. மகாலிங்கம் ஆகியோர் இனிப்பு வழங்கினர்.

குளித்தலை வட்டத்தில்:

'அஞ்சுகம்' இதழ் அலுவலகத்தில் அலங்காரக் கொட்டகை அமைத்து அறிஞர் அண்ணா அவர்களின் பல்வேறு தோற்றமுள்ள படங்களை மின்சார விளக்குகளால் அலங்கரித்து விழா எடுத்தனர்.

அண்ணா அஞ்சலி முறையில் வண்ணச் சுவரொட்டி நகரெங்கும் 'அஞ்சுகம்' ஏடு சார்பில் ஒட்டப்பட்டது.

பள்ளி மாணவ — மாணவியர்கட்கு இனிப்பும், நோட்டுப் புத்தகமும் 'அஞ்சுகம்' ஆசிரியர் இளமுருகு பொற்செல்வி நேரில் சென்று வழங்கினர்.

அறிஞர் அண்ணா அலங்காரம் பதினைந்து நாட்களுக்கு இருக்கவும் நாள்தோறும் விழா நிகழ்ச்சி நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தெலுங்கபட்டி

தி. மு. க. சார்பில் 64 கொடிகளும் — 64 தோரணங்களும் கட்டப்பட்டு விழா கொண்டாடப்பட்டது; அண்ணா உருவப் படம் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது; இனிப்பும், சர்க்கரைப் பொங்கலும் வழங்கப்பட்டது.

திருச்சி வட்டத்தில்:

நகரப் பெட்டிக் கடைகள் சார்பில் 15—9—72 அன்று சிங்காரத் தோப்புப் பகுதியில் சாலையின் இருபுறமும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திரு. எஸ். ஏ. ஜி. ராபி கொடி ஏற்றிவைத்தார்.

திரு. ஐ. எம். ஷரீப் இனிப்பு வழங்கினார்; திரு. எஸ். எம். உசேன் நன்றி கூறினார்.

10-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தில், திரு. எஸ். ஏ ஜி. ராபி தலைமையில் விழா நடைபெற்றது; 64 வேட்டுகள் முழங்க திரு. த. செவந்திலிங்கம் எம்.சி. கொடியேற்றிவைத்தார்; திருச்சி வட்டச் செயலாளர் எம். நடராசன், திராவிடர் கழகச் செயலாளர் செல்வேந்திரன் ஆகியோர் இனிப்பு வழங்கினர்; துணைச் செயலாளர் ஜே. அமீர்ஜான் நன்றி கூறினர்.

16-வது வட்டம்

தோழமைக் கழகத்தின் சார்பில் அண்ணா சதுக்கத்தில் (வன்னி மரத்தடி) சீரும் சிறப்புமாக விழா கொண்டாடப்பட்டது; திரு. செல்வேந்திரன் தலைமைதாங்கினார்; நகர மன்ற உறுப்பினர் திரு. ஏ. வி. கே. கிருட்டினமூர்த்தி கழகக் கொடியினை ஏற்றிவைத்துச் சிறப்புற ஆற்றினர்.

அண்ணாவின் சிறப்பியல்புகளைப் பற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், வி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ. செவந்திலிங்கம் எம்.சி., எஸ்.ஏ ஜி. ராபி, எம். நடராசன், கரும்பு மணி ஆகியோர் பேசினர்.

திரு. ஆர். நாகசுந்தரம் ஏழைகட்கு உணவு வழங்கினர்; திரு. அன்புமணி நன்றி கூறினர்.

செப். 15, 16 17 ஆகிய நாட்களில் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் மின்விளக்குகளால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

20-வது வட்டம்

தி.மு.க. கிளைச் சார்பில் 15—9—72 காலை 10 மணிக்கு வி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ. தலைமையில் — ஏ. வி. கிருட்டினமூர்த்தி எம்.சி. முன்னிலையில் நடைபெற்றது; நகர தி.மு.க. செயலாளர் எஸ் ஏ ஜி. ராபி கொடியேற்றினர்; 1,000 பேருக்கு எம்.எஸ். மணி உணவு வழங்கினர்.

விருதுநகர்

நகர தி.மு.க. சார்பில் மூன்று நாட்கள் வெகு சிறப்பாக விழா கொண்டாடப்பட்டது.

15—9—72 அன்று விருதை சிறையில் உள்ள கைதிகள் அனைவருக்கும் பொதுக் குழு உறுப்பினர் வா. அ. சங்கரபாண்டியன் பொங்கல் வழங்கினர்.

நகரில் பல்வேறு இடங்களில் கழகக் கொடிகளை வா. அ. சங்கரபாண்டியன் ஏற்றிவைத்தார்.

17-ந் தேதி சிறப்பான ஊர்வலம் நடைபெற்றது.

பம்பாயில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

★

கோவண்டி

பம்பாய் — கோவண்டி தி. மு. க. சார்பில் 24—9—72 பகல் 2-மணியளவில் பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஆரியசங்காரன் கொடியேற்றி வைக்க, தோழர் த. மு. பொற்கோ அறிஞர் அண்ணாவின் படத்தை திறந்துவைத்து சொற்பொழிவு ஆற்றினர்.

தோழர்கள் பி. எஸ். கலைச்செல்வன், இராமசாமி, டி. எம். சாமி, ஊர்துசாமி, செல்லப்பா, கண்ணன் ஆகியோர் பேசினர்.

சுமார் 500 ஏழைகட்கு பாயசம் வழங்கப்பட்டது; இதற்கான ஏற்பாடுகளை செயலாளர் வா. கிருஷ்ணன் செய்திருந்தார்; துணைச் செயலாளர் க. பரமசிவன் நன்றி கூறினர்.

தாராவி

தாராவி கே. கே. கே. சாமி நினைவு மன்றத்தின் சார்பில் 24—9—72 காலை 9-மணியளவில் எஸ். கே. சாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றிட திராவிடர் கழகத் தலைவர் ஆர். ஏ. சுப்பையா தலைமையில் விழா நடைபெற்றது.

தோழர்கள் டி. ஏ. வான்மதி, ம. இரா. குறள்தாசன், பி. எஸ். பிச்சையா, ஜெயக்கனி, எஸ். ஆர். இராசமணி, ஆர். லோகநாதன் ஆகியோர் பேசினர்; என். செல்லத்துரை நன்றி கூறினர்.

மாலை 7-மணியளவில் மன்றச் செயலாளர் எஸ் கே. சாமி தலைமையில் மாலை நிகழ்ச்சி அவைத் தலைவர் எஸ். ஆறுமுகம் வரவேற்புரை ஆற்றியபின் துவங்கியது.

அறிஞர் அண்ணா படத்தை பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் திறந்துவைத்துப் பேசினர்.

தோழர் த. மு. பொற்கோ தந்தை பெரியார் படத்தையும், எல். என். செழியன் வள்ளுவர் படத்தையும், என். செல்லத்துரை கே. வி. கே. சாமி படத்தையும் திறந்துவைத்துப் பேசினர்.

மற்றும் தோழர்கள் த. மு. ஆரியசங்காரன், பி எஸ். கலைச்செல்வன், அருணசங்கர், இராசன், அந்தோணி, கே. ஏ. கருணாநிதி, நெல்லை வளவன், எஸ். எம். சுப்பையா ஆகியோர் பேசினர்.

காலகில்லா கரை

காலகில்லா கரை தி. மு. க. ஆதரவாளர்களின் சார்பில் 26—9—72 இரவு 7-30 மணிக்கு பம்பாய் தி. மு. க. செயலாளர் எல். என். செழியன் தலைமையில் விழா நடைபெற்றது; பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் அண்ணா படத்தைத் திறந்துவைத்து உரையாற்றினர்.

மற்றும் தோழர்கள் த. மு. ஆரியசங்காரன், பி. எஸ். கலைச்செல்வம், எஸ். எஸ். சுப்பையா, சேரை முகமது குமார் ஆகியோர் இனிய சொற்பொழிவாற்றினர்.

பின்னர், கமுகுமலை எம். சுப்பையா—எம். எஸ் முத்தையா குழுவினரின் நையாண்டி மேளத்துடன் நெல்லை மல்லிகா—ஆவுடையம்மாள் கரக ஆட்டம் நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது; தோழர் எஸ். நடராசன் நன்றி கூறினர்.

கூட்டம் சிறப்புற நடைபெற தோழர்கள் எஸ் ஜி. முத்தையா, வி. ஆறுமுகம், பி. நயினர், எம். சண்முகசுந்தரம், டி. கிருஷ்ணன் ஆகியோர் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டனர்.

பம்பாயில் பகுத்தறிவாளர் கழகம்

பம்பாய்ப் பகுத்தறிவாளர் கழக அமைப்புக் கூட்டம் 11—9—72-ல் மாதுங்கா போதார் கல்லூரியில் தோழர் த. மு. பொற்கோ தலைமையில் நடைபெற்றது.

தோழர் பொ. தொல்காப்பியன் அனைவரையும் வரவேற்று, பம்பாயில் பகுத்தறிவுக் கழகம் செயல்பட வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினர்.

மற்றும் தோழர்கள் எஸ். சிவகுருநாதன், பெ. மந்திரமூர்த்தி, மா. ரா. சு. இசக்கி, ஆரியசங்காரன், ரோட்ரிக்ஸ், ஆர். ஏ. சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கீழ்க்கண்ட தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: தொல்காப்பியனர்; துணைத்தலைவர்: த. மு. பொற்கோ; செயலாளர்கள்: இரா. மா. சண்முகராசன், மா. ரா. சு. இசக்கி; பொருளாளர்: பெ. மந்திரமூர்த்தி; செயற்குழு உறுப்பினர்கள்:— எஸ். தியாகராசன், ஆர். ஏ. சுப்பையா, ஆரியசங்காரன், எல். என். செழியன், எஸ். டி. இராவணன்.

பேச்சாளர் முகவரி

கி. மணியரசன்,
பட்டுக்கோட்டை,
தஞ்சை மாவட்டம்.

25 ஆண்டுக்குப் பின் உணரப்படும் நிலை

மத்திய--மாநில உறவு குறித்து மறுபரிசீலனை தேவை

இந்தியாவில் வேரூன்றும் சனநாயகம் -- சட்டப்பேரவைத் தலைவர் மதியழகன் விளக்கம்

சென்னை, அக். 2—

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 112-வது பிரிவில், மத்திய--மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; சட்டம் இயற்றும் அதிகாரங்கள் மத்திய அரசுக்கும்--மாநில அரசுகளுக்கும் இடையிலான பட்டியல்களில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன; இரண்டுக்கும் பொதுவான பிரச்சினைகளில் பொதுப் பட்டியல் ஒன்றும் இடம் பெற்றிருக்கிறது.

"நாடாளுமன்றம்--சட்டப்பேரவைகள் ஆகியவற்றின் அதிகார வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டு வரம்பிடப்பட்டுள்ளன.

"25 ஆண்டுகள் அனுபவத்திற்குப் பிறது மத்திய--மாநில அரசுகளின் உறவுகளை மறுபரிசீலனை செய்து திருத்தியமைக்க வேண்டும் என்ற அவசியம் தற்போது உணரப்படுகிறது; இதனை மறைப்பதில் பயனில்லை.

இந்த முக்கியமான பிரச்சினைகளில் இம்மாநாடும்--கருத்தரங்கும் அதிகக் கவனமும், சிரத்தையும் செலுத்தி, மத்திய--மாநில அரசுகளிடையே பயன்தரத்தக்க நல்லுறவுகளைக் காண வழி செய்யும் விவாதங்களில் ஈடுபடும் என்று கருதுகிறேன்.

"அதே சமயத்தில், இந்தியாவின் ஒற்றுமையை நிலைநாட்டுவதுடன், மாநிலங்களின் சுயாட்சிக்கும் வழிகாணும் முறையில் அவற்றின் நிர்வாக அதிகார வரம்புகளை விளக்கி வரம்பிடுவதாகவும் இருக்கும்"

என்று, தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், நாடாளுமன்ற--சட்டமன்றத் தலைவர்களின் பொன் விழா மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது:—

"இந்தியா ஒரு மாபெரும் சனநாயக நாடு; இந்திய மக்களின் நுண்ணறிவு--பண்பாடு ஆகியவற்றின் பயனாக இங்கு சனநாயகம் நன்கு வேரூன்றியிருக்கின்றது.

இந்த வகையில், இம் மாநாடு, பெரிதும் பயன்தரத் தக்கதாகும்--வளமையும் முக்கியத்துவமும் வாய்ந்ததுவுமாகும்.

பழங் காலத்திலேயே தமிழக மக்களுக்கு சனநாயகத்தில் பிடிப்பு ஏற்பட்டிருந்தது; 'குடவோலை' என்ற தேர்தல் முறை அன்றைய தமிழகத்தில் நடைமுறையில் இருந்தது; சேர--சோழ--பாண்டியர்கள் காலத்திலேயே கிராமப்புற ஆட்சி அமைப்புக்களை நிறுவி ஆட்சி பரவலாக்கப்பட்டிருந்தது.

அறநெறி--ஆட்சி முறை பற்றிய உயர்ந்த கோட்பாடுகள் தமிழ் நூலான திருக்குறளில் உள்ளன; திருக்குறளும்--சிலப்பதிகாரமும்--மணிமேகலையும் அக்காலத் தமிழ்ச் சிறப்பிற்குச் சான்றாக உள்ள நூல்களாகும்."

அமைச்சருக்குப் பதில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றென்று கிராமவாசிகள் இரவு வெகுநேரம் காத்திருந்தனர்.

கடைசியில் அதைத் திறப்பதற்கு ஓர் ஏழை, அரிசன முதியவரைத் தேர்ந்தெடுத்தனர்; மாண்டு வாத்தியங்களுடன் அவரை அழைத்து வந்து வரவேற்றனர்.

அந்த ஏழைக் குடியானவர் மருத்துவ நிலையத்தைத் திறந்து வைத்தார்.

வேலையின்மையைப் போக்குவதற்காகத் துவக்கப்படும் மருத்துவ நிலையம் இது.

அண்ணா--காந்தி பிறந்த நாள் விழா

சென்னை--இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலை வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு முத்தமிழ் மன்றச் சார்பில் 7—10—72 மாலை 7 மணியளவில், பேரறிஞர் அண்ணா--அண்ணல் காந்தியார் பிறந்த நாள் விழா நடைபெறும்; தலைவர்: ஆ. அதியமான்; மன்றத் திறப்பாளர்: முரசொலி மாறன் எம்.பி.; சிறப்புரையாற்றுவோர்: அமைச்சர் க. அன்பழகன், மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம், அப்துல் சமது எம்.பி., எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., முத்துப் பிள்ளை, சா. கணேசன் எம்.பி., மு.க. ஸ்டாலின்.

தமிழிசை வாணி யூ. ஆர். ஜீவரத்தினம் இன்னிசை நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; [illegible] அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

திருச்சி மாவட்டக் கலை இலக்கியப் பேரவை துவக்க விழா

8—10—72 காலை 10 மணியளவில் மேற்படி பேரவை துவக்க விழா, தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும், தலைவர்: புலவர் க. முருகேசன்; வரவேற்புரை: புலவர் சி. சோமசுந்தரம்; துவக்க விழாப் பேருரை: கி.ஆ.பெ. விசுவநாதம்; பல்வேறு தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவு: புலவர்கள் வி.அ. அரங்கசாமி, க. முருகையன், க. சீதாராமன்; வாழ்த்துரை: எம். எஸ். வெங்கடாசலம், வி. கிருட்டிணமூர்த்தி எம்.எல்.ஏ., கே.எ[illegible] கணபதி, தி. செவந்திலிங்கம் எ[illegible] சி., எஸ். வரதராசன் மற்றும் பலர்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன் நிகழ்ச்சிகள்

அக். 7: மேலூர் தெற்குத் தொகுதி.

அக். 8: முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மதுரை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். ஆர். குடும்பத்துக்கு உதவி

நிதி திரட்டுவதற்குக் குழு அமைப்பு

சென்னை, அக். 6—

மறைந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் குடும்பத்திற்கு நிதி திரட்டி அளிப்பதற்கான குழு ஒன்று, சென்னை மாவட்டக் கழகச் சார்பாக 1—10—72 அன்று நடைபெற்ற சென்னை மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

குழுத் தலைவர்:--நீலநாராயணன் எம்.எல்.சி.

குழுச் செயலாளர்:—ஆர். டி. சீதாபதி.

குழுப் பொருளாளர்:—டி. கே. கபாலி.

குழு உறுப்பினர்கள்:— சோ. மா. இராமச்சந்திரன், மு. வரதராசன்.

இந்தத் தகவலை, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

குழுக் கூட்டம்

சென்னை 7-வது வட்டம்

வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக உறுப்பினர்கள் கூட்டம், 8—10—72 இரவு 7-மணிக்கு கு. சண்முகம் தலைமையில் 72, எம். சி. ரோடில் உள்ள படிப்பகத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் வி. எம். கருப்பையா கேட்டுக் கொள்கிறார்.

வட்டக் கழக (சென்னையில் பகுதிக் கழக)ச் செயலாளர்களுக்கு அறிவிப்பு

அந்தந்த மாவட்டங்களில் வட்டந்தோறும் அமையும் புதிய கிளைகளுக்கான உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பப்பட்ட விவரங்கள்படி, தலைமைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் அந்தந்த வட்டச் செயலாளர்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டுவிட்டன. (பழைய கிளையாயிருப்பின் பதிவு செய்யப்பட்ட உரிமைச் சீட்டுக்கள் அந்தந்தக் கிளையின் செயலாளருக்கே அனுப்பப்படுகின்றன).

இதன் அடிப்படையில், கீழ்க் குறிப்பிட்டுள்ளவைகளுக்கான விவரங்களைத் தெளிவாக 10—10—72-ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்குமாறு எல்லா வட்டக் கழக (சென்னையில் பகுதிக் கழக)ச் செயலாளர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. வட்டக் கழகச் செயலாளர் என்ற முறையில் மாவட்டச் செயலாளரிடத்திலிருந்து பெற்றுள்ள உறுப்பினர் பதிவுத் தாள்கள் எண்ணிக்கை.
2. மாவட்டச் செயலாளரிடத்திலிருந்து பெற்ற உறுப்பினர் தாள்களை வட்டத்தின் பழைய -- புதிய கிளைகளுக்காகக் கொடுத்துள்ள விவரம்.
3. வட்டத்தின் புதிய கிளைகளுக்காகத் தலைமைக் கழகத்தில் பதிவு செய்து அனுப்பப்பட்டுத் தாங்கள் பெற்றுள்ள உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களின் கிளை வாரியான விவரம்.
4. தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டுத் தாங்கள் பெற்றுள்ள உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரிய கிளைகளுக்குச் சேர்ப்பித்துவிட்ட விவரம்—கிளை வாரியாக.

மேற்குறிப்பிட்டுள்ளவை குறித்துத் தெளிவான விவரங்களை 10—10—72-க்குள் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிப்பதுடன், தலைமைக் கழகத்திலிருந்து பெற்று--ஆனால், உரியவர்களிடம் இதுவரை சேர்ப்பிக்காமலிருக்கும் உறுப்பினர் அட்டைகளை உடனடியாக உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடுமாறும், அப்படிச் சேர்ப்பிக்கப்படாமலிருப்பதற்கு ஏதாவது காரணம் இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த உரிமைச் சீட்டுக்களை அப்படியே தலைமைக் கழகத்திற்கு 10—10—72-ஆம் நாளுக்குள் அனுப்பிவைக்குமாறும் இதன்மூலம் எல்லா வட்டக் கழகச் செயலாளர்களையும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்', சென்னை-13
5—10—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

தலைமைக் கழக அறிவிப்பு

வாலாஜா ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல்

7—10—72 அன்று நடைபெறவிருக்கும் வாலாஜா ஊராட்சி ஒன்றியம் பெருந்தலைவர் தேர்தலில், வாணாபாடி ஊராட்சித் தலைவர் தோழர் நா. ரேணு அவர்கள் போட்டியிடுவதற்குத் தலைமைக் கழகம் அனுமதி அளித்துள்ளது.

வாலாஜா ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த உறுப்பினர்களும்--அமைப்புகளும், தோழர் நா. ரேணு அவர்கள் வெற்றிக்கான உறுதுணை புரிந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

அறிவகம்' சென்னை-13
5—10—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

முதலமைச்சர்

கலைஞர் கருணாநிதி நிகழ்ச்சிகள்

8—10—72

காலை 9-30 மணி: மதுரை மீனாட்சியம்மன் கோவில் அறநிலைய மண்டபம் திறப்பு;

10 மணி: கூடலழகர் பெருமாள் திருமண மண்டபம் திறப்பு;

11 மணி: நெடுஞ்சாலை மேம்பாலம் திறப்பு.

மாலை 4-30 மணி: மேலூர்—பேரூராட்சி மன்றப் புதிய கட்டடத் திறப்பு;

5 மணி: கண் சிகிச்சை முகாம் நிகழ்ச்சிகள்; நிலப் பட்டா--வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

இரவு 7 மணி: மதுரை—பொதுக் கூட்டம்.

9—10—72

காலை 10-30 மணி: மண்டபம் (இராமநாதபுர மாவட்டம்), மீன் தூள் நிலையத் துவக்க விழா;

மாலை 5-30 மணி: பரமக்குடி—விவசாயிகட்குப் பட்டாப் புத்தகம் வழங்குதல்; குளம்கோர்வை நிலப் பட்டா வழங்குதல்.

இரவு 7-30 மணி: சிவகங்கை—பொதுக்கூட்டம்.

நீதியாளர் கழகம் நடத்து பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

அமைச்சர் என். வி. நடராசன் கலந்துகொள்வார்

நீதியாளர் கழகம் (ஜஸ்டிசைட்ஸ் அசோசியேஷன்) சார்பில 8—10—72 மாலை 6 30 மணிக்கு சென்னை லாயிட்ஸ் சாலை நல வாழ்வு மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும்.

நீதிக் கட்சித் தலைவர் திரு. பி. டி. இராசன் தலைமைவகிப்பார்.

அமைச்சர் திரு. என். வி. நடராசன் விழாவைத் துவக்கி வைப்பார்.

செட்டிநாட்டரசர் திரு. எம். ஏ. முத்தையா செட்டியார், அண்ணா எழுதயதோவியங்கள் சேகரிப்புப் பணியைத் தொடங்கி வைப்பார்.

நீதிபதி திரு. கே. நாராயணசாமி முதலியார் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

திரு. என். முருகேச முதலியார், பேராசிரியர் சி. டி. இராசேசுவரன், பேராசிரியர் மா. கி. தசரதன், கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி., எம். கோபால எம.எல்.சி., சி. வி. இராசகோபால் எம்.எல்.ஏ., வலம்புரி ஜான், புலவர் வேதா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்

8--10--72

திருக்கழுக்குன்றம்

நகர தி. மு. க. சார்பில் அண்ணா சிலை திறப்பு; பிற்பகல் 3-மணிக்கு பஸ் நிலையம் அருகில்; வரவேற்புரை: க. அன்பு குருசாமி; தலைவர்: செ. ஏ. பலராமன்; பேசுவோர்: புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., சி. சிட்டிபாபு எம்.பி., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., வி. பி. அகிலன், டி. ஆர். துரை, தி. கா. நடராசன், எம். எஸ். ஏ. வகாப், வ. வேணு, க. துரை, தி. சி பூசனம், மற்றும் பலர். (அண்ணா உருவச் சிலையை எம். ஜி ஆர். அவர்கள் திறந்து வைப்பார்.)

மதுரை மாவட்ட தி.மு.க. 5-வது மாநாடு

பாராட்டு--பொதுக்கூட்டம்

மதுரை மாவட்ட தி மு. க. செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் அறிவிப்பதாவது:—

"மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற உதவிய கழகத் தோழர்களைப் பாராட்ட 8—10—72 பிற்பகல் 1-மணியளவில் நடைபெறும் விருந்துக்கும், மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கும், சட்டமன்ற--நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், கழகப் பொதுக்குழு--மாவட்டக் கழக உறுப்பினர்கள், கழகப் பிரமுகர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்; கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், மற்றும் அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், ஓ. பி. இராமன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.